அ.வ.எண்: 20/2018 நாள்: 28.04.2026

வா.சா.2 – சின்னையா

சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

சாட்சியின் ஆதார் அட்டை சரிபார்க்கப்பட்டது.

**<u>2 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1. நான் தாவா வழக்கில் தரப்பினர் இல்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த நிரூபண வாக்குமூலத்திற்கான விபரங்களை யார் கூறியது என்றால் நான் தான் கூறினேன். வாதி எனக்கு என்ன உறவு முறை வேண்டும் என்றால், அவர் எனது மனைவி ஆவார். வாதி என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால், தாவா சொத்து சம்பந்தமாக பிரதிவாதிகள் ஏற்படுத்திய ஆவணத்தை ரத்து செய்யக்கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்து யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் எனது மனைவிக்கு பாத்தியப்பட்டது. தாவா சொத்து எனது மனைவிக்கு பூர்வீக பாத்தியமா அல்லது கிரையப் பாத்தியமா என்றால் கிரைய பாத்தியம் ஆகும். எனது மனைவி யாரிடமிருந்து கிரையம் வாங்கினார் என்றால், எனது மனைவி கிரையம் வாங்கவில்லை, நான்தான் அவருக்கு இனாமாக கொடுத்தேன். தாவா சொத்தை எனது தாயார் மைனர் ஆகிய எனக்காக கருப்பையா மகன் சுப்பையா என்பவரிடமிருந்து கிரயம் வாங்கினார்.

2. தாவா சொத்து சுப்பையாவிற்கு எவ்வாறு பாத்தியம் என்றால் அது அவருக்கு பரம்பரை சொத்து ஆகும். தாவா சொத்தை எனது மனைவிக்கு நான் எப்பொழுது இனாமாக கொடுத்தேன் என்றால், 29.12.2017 அன்று ஆவண எண்.3227 மூலமாக இனமாக கொடுத்தேன். எனது தாயார் தாவா சொத்தை எப்பொழுது கிரையம் வாங்கினார் என்றால் 1994 ஆம்

ஆண்டு ஆவண எண்.604/1994 மூலம் கிரையம் வாங்கினார். எனது தாயார் எப்பொழுது இறந்தார் என்றால் 2015 ஆம் ஆண்டு இறந்தார். தாவா சொத்தின் பட்டா எண் தெரியுமா என்றால் பழைய பட்டா எண். 1171 ஆகும், புதிய பட்டா எண் 1634 ஆகும். தாவா சொத்தின் சர்வே எண்.144/ 12 ஆகும் அதன் மொத்த விஸ்தீரணம் 17.5 ஏர்ஸ் ஆகும். என்னுடன் பிறந்தவர்கள் எத்தனை நபர்கள் என்றால் யாரும் இல்லை நான் ஒரே மகன்.

3. தாவா சொத்து தற்போது என்ன வகைப்பாடாக உள்ளது என்றால் புஞ்சை நிலமாக உள்ளது. தாவாசொத்தின் நான்குமால் தெரியுமா என்றால் தெரியும். மேற்கில் ரேவதி வீடும், வடக்கில் ரோடும், கிழக்கில் கருப்பையாவின் மனைவி மீனாட்சி இடமும், தெற்கு பக்கம் ஆதீனமிளகி வகையறா இடமும் உள்ளது.

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u>

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.

PREMI R

Digitally signed by PREMI R
Date: 2026.04.28 17:14:52 +0530